**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 செப்டெம்பர் 11 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 டிசம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாநகர சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மின் உற்பத்திச் சாதனப் பழுதுபார்த்தலுக்காக 2019 ஒக்டோபர் 01 முதல் 2020 செப்டம்பர் 30 வரை செலுத்த வேண்டிய கட்டணமாகிய ரூபா 485,892 நடப்பாண்டின் செலவாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஆ) | நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,798,243 பெறுமதியான குளிரூட்டிகள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | தொழில்நுட்ப உபகரணக் கொள்வனவுக்கான ரூபா 249,430 மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | நகர சபையின் நிலையான சொத்துக் கணக்கீட்டுக் கொள்கையின் படி ரூபா 5,000 க்கு மேற்பட்டவை நிலையான சொத்தாக கணக்கிலிடப்படும். அதற்கமைய, நிலையான சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கிலிடப்பட வேண்டிய தொகை ரூபா 249,430 ஆகும். |
| (ஈ) | தொழில்நுட்ப உபகரணக் கொள்வனவுக்கான ரூபா 116,760 கொடுப்பனவு இரு தடவைகள் கணக்கிலிடப்பட்டிருந்தன. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | ஜனஜயசிட்டி வர்த்தகக் கூட்டுத் தொகுதியின் கடை வாடகை வருவாயாகிய ரூபா 2,380,956 நடப்பாண்டின் வருவாயாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஊ) | நடப்பாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கழிவுப் பொருள் வரி ரூபா 4,179,285 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 756,750 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (எ) | 2019 ஆம் ஆண்டிற்கென கழிவுப் பொருள் வரிக்கான விலைப் பட்டியல் ரூபா 14,974,200 ஆகியபோதும், வருவாய், செலவினக் கணக்கில் ரூபா 11,908,915 செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஏ) | நீர்க்குழாய்களைப் பொருத்தும் போது 2018 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் சபையால் பழுதடைந்த 02 வீதிகளை மீண்டும் திருத்தம் செய்வதற்கு பெறவேண்டிய ரூபா 1,513,170 கணக்கிலிடப்படவில்லை. | சரியாகக் கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஐ) | ஜனஜயசிட்டி சுபர் வர்த்தகக் கூட்டுத்தொகுதியின் ஜெனரேட்டரை சுத்திகரிப்பதற்கு வழங்க வேண்டிய ரூபா 527,733 இரு முறை கணக்கிலிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 02 கணக்கீட்டு விடயங்களது மொத்தப் பெறுமதிக்கும் அதனோடு தொடர்புடைய பட்டோலையில் காணப்படும் மொத்தப் பெறுமதிக்கும் இடையேரூபா 16,144,281 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்கு மீதிகளை கணக்கிணக்கம் செய்து திருத்தம் செய்ய வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வினோத வரியாக 02 சினிமாத் திரையரங்குகளிலிருந்து பெற வேண்டிய ரூபா 2,781,680 நான்கு ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்தது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | வெளிநபர்களுக்கு வழங்கப்பட்ட 30 புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 51,000 அறவிடப்படவில்லை. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையான ரூபா 188,581 கொடுப்பனவு செய்யப்படவில்லை. | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான ஆவணச் சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றினை ரூபா 586,637,185 பெறுமதியான 06 கணக்கீட்டு விடயங்களின் பொருட்டு சமர்ப்பிக்கவில்லை. | கணக்குகளது மீதியைஉறுதி செய்வதற்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 247 ஈ(1) பிரிவு | அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 10 வருவாய் பிரிவுகளில் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத வெற்றுக் காணிகளது எண்ணிக்கை 1218 ஆகும். அவற்றுள் 13 க்கு வரி அறவிடப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டம் | சகல அசைவற்ற சொததுக்களும் வரி அறவீட்டிற்காக 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யபடவில்லை. | வரி மதிப்பீடு நாளதுவரை யாக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி 371(5) | மீளாய்வாண்டில் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட 12 முற்பணங்களாகிய ரூபா 477,227 தீர்வு செய்யப்படவில்லை. | வழங்கப்பட்ட முற்பணம் தாமதமின்றி தீர்வு செய்யப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி 1642<br>நி.பி 128(1)(ஐ) | நுகேகொட பஸ் தரிப்பிடக் கூட்டுத் தொகுதியின் நீர்க் குழாய்களுக்கு மானிகளைப் பொருத்தி முறையான முகாமைத்துவம் மேற்கொள்ளாததால் ரூபா 966,259 நீர்க்கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டது. | பொது நீர்க் குழாய்கள் முறையாக முகாமைத்துவ மிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>------------------------------- | | | |
| | XXIV அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு | ஓய்வுபெற்ற 18 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதியாகிய ரூபா 1,219,423 குறித்த உத்தியோகத்தர்களது பணிக்கொடையிலிருந்து அல்லது குறைக்கப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாது அவர்களுக்கு ‘‘கோரிக்கை இல்லை எனும் சான்றிதழ்’’ வழங்கப்பட்டதால் அந்நிலுவை மீதியை அறவிட முடியாதிருந்தது. | கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (உ) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>--------------------------- | | | |
| (i) | 1985 மார்ச் 20 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபை சுற்றறிக்கை இலக்கம் டிசம்பர் 01, 05 ஆம் பந்தி | அதிக விகிதமான நிலப்பரப்பு, அத்துமீறிய நிர்மாணம், அத்துமீறி பாவனையில் மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பவற்றிற்கு விண்ணப்பதாரர்களிட மிருந்து அறவிடப்படும் கட்டணத்தில் 25 சதவீதமும் மோட்டார் தரிப்பிடத்திற்கான இடவசதி போதாமை | கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை தீர்வு செய்யப்பட வேண்டும். | கருத்து வெளியிடப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காரணமாகவும் அறவிடப்படும் சேவைக் கட்டணம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்படவில்லை. | | |
| (ii) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | கடை வாடகை 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவையேனும் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், மாநகர சபையின் கடை வாடகை மதிப்பீடு 2013 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப் பட்டிருந்தது. | தாமதமின்றி கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்பட வில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 75,615,584 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 333,399,607 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆறு முதல் 25 ஆண்டுகளாக கொடுப்பனவு மறுக்கப்பட்ட வாறிருந்த ரூபா 116,514 பெறுமதியான 36 காசோலைகள் தீர்வு செய்யப்படாதிருந்தன. | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் யாவும் தாமதமின்றி தீர்வு செய்யப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | 1986 முதல் 2019 வரை நகர அபிவிருத்தி சபை வைப்பாக சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 1 4,300,405 ஆகும். அதில் செலவினத் தோற்றுவாயாகிய ரூபா 1,577,618 கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | மாநகர சபையின் சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் சம்பந்தமான தகவல்கள் கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் | 2018 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2018 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2018 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2017 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2017 சேகரிக்கப்பட்ட வருவாய் | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 239,525,000 | 246,594,368 | 225,995,509 | 100,551,431 | 222,000,000 | 237,433,234 | 211,577,509 | 101,507,737 |
| (ii) | வாடகை | 64,332,000 | 54,329,729 | 39,913,489 | 17,193,174 | 65,053,000 | 29,562,074 | 29,302,712 | 5,522,091 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 11,601,000 | 6,430,110 | 6,445,110 | - | 6,361,000 | 6,715,639 | 6,715,639 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 479,637,000 | 153,025,946 | 145,523,609 | 3,987,517 | 379,542,000 | 468,558,207 | 468,558,207 | 3,425,777 |
| | | 795,095,000 | 460,380,153 | 417,877,717 | 121,732,122 | 672,959,000 | 742,269,154 | 713,826,839 | 110,455,605 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு ரூபா 50,000 க்கு மேற்பட்ட 167 தீர்வைக் கூறுகளிலிருந்து ரூபா 22,487,530 அறவிடப்பட வேண்டியிருந்தது. | வருவாய் நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுபர் வர்த்தக கூட்டுத் தொகுதி, பொதுச் சந்தைக் கூட்டுத் தொகுதி, மக்கள் சந்தை கழிவறைகள் என்பவற்றிலிருந்து நடப்பாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு நிலவிய வாடகை நிலுவை ரூபா 16,841,017 ஆகும். | வாடகை நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) நுகேகொடை மக்கள் சந்தை மற்றும் பஸ் தரிப்பிடம் என்பவற்றில் அமைந்துள்ள கழிவறைகளிலிருந்து நடப்பாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 104,456 ஆகும். இதில் எதுவுமே அறவிடப்படாததுடன் நுகேகொடை பஸ் தரிப்பிட கழிவறையின் 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 214,500 வாடகையில் ஆண்டின் போது ரூபா 93,300 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வாடகை நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) ஜனஜயசிட்டி வர்த்தக கூட்டுத் தொகுதியின் வியாபார நிலையங்கள், அலுவலகங்கள், சினிமா திரையரங்குகள் அடங்கலாக 421 கடைகளின் நடப்பாண்டு வாடகை வருவாய் ரூபா 25,181,120 ஆகும். ஆண்டின் போது அறவிடப்பட்டது ரூபா 14,860,760 ஆகும். | வாடகை நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஈ) மேற்படி வர்த்தகக் கூட்டுத் தொகுதியில் உள்ள கடைகளில் 2019 ஆம் ஆண்டின் போது வாடகை எதுவுமே அறவிடப்படாத 52 கடைகளிலிருந்து பெற வேண்டியிருந்த தொகை ரூபா 5,463,441 ஆகும். | வாடகை நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

**2.3.4 தண்டப் பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயத்தினது) 226(1) பிரிவின் பிரகாரம் பொறுப்பானவர் களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 10 தண்டப் பணமாக ரூபா 24,386,888 அறவிடப்பட வேண்டியிருந்தது. | விதிக்கப்பட்ட தண்டப்பணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்பு**

| கைவிடப்பட்ட பணிகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை ரூபா 295,579,801 செலவில் ஆரம்பித்திருந்த பிட்டகோட்டே ஜயராஜ சிட்டி கலவை அபிவிருத்தி செயற்திட்டம், மாநகர சபையின் வேலைக் கூறு, வாகனப் பராமரிப்பு கூறு, களஞ்சியக் கூட்டுத் தொர்குதிக் கட்டிடம், புதிய மாநகர சபை அலுவலகக் கட்டிடம் என்பவற்றினது நிர்மாண செயற்திட்டங்களானது முடிவடையாது கைவிடப்பட்டிருந்தன. | குறித்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஊழியர் ஒருவர் கடமை நேரத்தின் போது தெல்கந்த கட்டிடத்தொகுதி வளாகத்தில் நடமாடும் விற்பனை வாகனம் ஒன்றில் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்கு முகாமைத்துவம் அனுசரணையாகவிருந்தது. | ஊழியர்கள் கடமைகளுக்கு அப்பால் நடவடிக்கைகளில் ஈடுபடாதவாறிருக்க முகாமைத்துவம் கவனமாக இருக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 48,320,909 செலவில் நிர்மாணிக்கப்பட்ட அங்கம்பிட்டிய இருமாடி வீடமைப்புத் தொகுதியானது ஒப்பந்தகாரரின் கவனமின்மையால் 2016 ஆம் ஆண்டளவில் சுவர்களிலும் ஸ்லாப் தட்டுக்களிலும் வெடிப்பு ஏற்பட்டு குடியிருப்பாளர் | ஒப்பந்தகாரர் தொடர்பாகத் தேவையான நடவக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

அங்கிருந்து அகற்றப்பட்டு தற்காலிக வதிவிடம் வழங்கப்பட்டிருந்தது. 2019 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் குறித்த கட்டிட நிர்மாண வேலைக்கு ரூபா 49,337,170 செலவிடப்பட்டிருந்தும் மேற்கொண்டு ஏற்பட்ட இழப்பை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடம்**<br>2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் 102 ஆகும். சபையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அத்தியாவசிய பதவிகளான நிறைவேற்றுதர பதவிகள் 19 இல் 09 வெற்றிடங்கள் நிலவின. | அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்பப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | **ஊழியர் கடன்**<br>2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதியில் அறவிட முடியாத ரூபா 5,324,996 உள்ளடங்கியிருந்தது. அதற்குப் புறம்பாக, இனங்காண முடியாத ரூபா 1,786,633 கடன் மீதியும் இருந்தது. | காலங்கடந்த ஊழியர் கடன் நிலுவையை தாமதமின்றி அறவிட வேண்டும். | கருத்து வெளியிடப்படும். |
| (இ) | அறவிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது இனங்காண முடியாத ஊழியர் கடனாக ரூபா 1,786,633 பத்தாண்டுகளாக இருந்தது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 11,500,000 நகர அபிவிருத்தி அதிகாசபை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி நடப்பாண்டில் மீளப் பெறப்பட்டு சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட்டிருந்தது. | வேறு தரப்பினரது பணத்தைச் செலவழிப்பதற் குரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | ஜனஜயசிட்டி வர்த்தகக் கூட்டுத் தொகுதியின் மேல் மாடியில் ஹோட்டல் ஒன்றும் நீச்சல் தடாகமும் நடாத்தப்படுவதற்கு குத்தகையாளர் ஒருவரால் ரூபா 97,119,572 வழங்கப்பட்டிருந்த போதும், சபை உடன்படிக்கை செய்து கொண்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட வளாகத்தை குத்தகையாளருக்கு ஒப்படைக்காமையால் நடப்பாண்டின் இறுதித் தினத்திலும் அவ்வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தன. | உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

## 3.5 சொத்து முகாமைத்துவம்

### 3.5.1 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அருணோதயா மாவத்தையில் அமைந்துள்ள காணி ஒன்றில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டிடம் புனரமைக்கப்படாது பாழடைந்திருந்தது. | சொத்துக்களை பயனுள்ளவாறு பயன்படுத்த வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,825,375 செலவில் அச்சிட்ட ஆசிரிமத் கோட்டே எனும் பெயருடைய புத்தகத்தின் 4,000 பிரதிகளில் 2,809, பிரதிகள் மற்றும் அவற்றிற்குரிய 561 உறைகளும் 2019 இறுதித் தினத்திலும் களஞ்சியத்தில் பயனற்றவாறிருந்தன. | குறித்த புத்தகங்களை விநியோகிக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) | பொது வசதிகளுக்கென கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2015 ஆம் அண்டில் அதுல ஏ ஜமஹா விகாரைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதி ரூபா 1,680,000 குத்தகை பெறப்பட்டிருந்தது. காணியின் மண் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மண்ணில் நிலவிய அதிக நலிவு காரணமாக கட்டிடம் அமைப்பதற்கு பெருமளவு மேலதிக கிரயம் செலவாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இக்காணியைக் குத்தகைக்குப் பெற்று 04 ஆண்டுகளுக்கு மேலாகியும் பயன் எதுவும் பெறப்படவில்லை. | சபையின் சொத்துக்கள் பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.5.2 வாகனப் பாவனை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்படாதிருக்கும் ரூபா 8,400,000 பெறுமதியான அம்புலன்சும் கழிவுப்பொருள் அகற்றும் லொறியும் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை இன்றி இருந்தன. | செயலற்றிருக்கும் வாகனங்களைப் பழுதுபார்தது பயன்படுத்த தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.5.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருவாய் சேகரிப்பு உத்தியோகத்தர் 2018, நவம்பர், டிசம்பர் மாதங்களின் போது சேகரித்த கழிவுப் | சபை பெற வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பொருள் வரியான ரூபா 103,150 சபைக்குச் செலுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான தண்டப்பணம் ரூபா 61,020 ஆகும். இது வழங்கப்படவில்லை. | பொறுப்பானவர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) | சபைக்குச் சொந்தமான ரூபா 7,000,000 பெறுமதியான கெப் வண்டியை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று மேல் மாகாண அளுநரது செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனமாகப் பயன்படுத்தப்படுவதற்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அது தீக்கிரையாகியிருந்தது. வாகனத்தின் தற்போதைய பெறுமதியும் ஏற்பட்ட மேலதிக செலவினமும் ரூபா 7,406,180 ஆகும். பெறப்பட்ட காப்புறுதித் தொகைக்குப் புறம்பாக சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 1,546,180 ஆகும். இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நட்டத்தை அறவிட தாமதமின்றி சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

**3.6 பொருட் கொள்வனவு**

**3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | வருடாந்தம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட ஜனஜயசிட்டி கட்டிடத்தின் பொருட்டு 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 1,801,168,022 ஆகும். இதில் அடங்கிய எதிர்பாராச் செலவாகிய ரூபா 1 13,181,798 மற்றும் மேலதிக வேலை தொடர்பாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரசாங்க வழிகாட்டிக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (ஆ) | நாணாயக்கார மாவத்தையில் மாநகர சபை வேலைத்தளம், வாகனப் பராமரிப்புக் கூறு, களஞ்சியக் கூட்டுத் தொகுதிக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிக்கும் பணி 2014 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி ரூபா 17,651,987 செலவில் அத்திவாரம் வரை வேலை பூர்த்தியாகியிருக்கையில் ஒப்பந்தகார் நிர்மாண வேலையைக் கைவிட்டிருந்தார். ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த ரூபா 11,743,270 க்கான இரண்டு வங்கிப் பிணை முறிகளும் முதிர்வடைவதற்கு முன்னரே காசாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 6,183,416 அறவிடப்பட முடியாதிருந்தது.<br>நிர்மாணிக்கப்பட்ட அத்திவாரப் பகுதியும் தற்சமயம் மண்ணால் நிரப்பப்பட்டு மூடப்பட்டுள்ளதால் வேலையைக் கைவிட்டதால் செலவாகிய ரூபா 17,651,987 பயனற்ற செலவினமாகியிருந்தது. | சபையின் சொத்துக்களை பயனுள்ளவாறு பயக்படுத்தப்பட வேண்டும். கூடுதலாக வழங்கப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பதில் கிடைக்காத கணக்காய்வு ஐய வினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை ஆணையாளருக்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வழங்கப்பட்ட கணிப்பிட முடியாத ரூபா 145,847,368 கூட்டுத் தொகைக்குரிய 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(உ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |